


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 284 | 4 Pages | 11.5.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 284 | 4 பக்கங்கள் | 11.5.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

# நெல்லையில் அமையவுள்ள மாபெரும் நூலகத்திற்கு காயிதே மில்லத் பெயர்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

திருச்சி, மே.11

திருச்சியில் இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் பொன் விழா மாநாட்டில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். நிகழ்ச்சியில் பேசிய மு.க.ஸ்டாலின்,


இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் சார்பில் நடைபெறும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டைத் தொடங்கி வைத்து, விருதுகள் வழங்குவதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் நான் அடைகிறேன். கடந்த நான்காண்டுகளில், சிறுபான்மையின மக்களுடைய சமூக பொருளாதார, கல்வி நிலைகளை மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்களை, சாதனைகளை படைத்திருக்கிறோம். அண்மையில்கூட, நங்கநல்லூரில் 'தமிழ்நாடு ஹஜ் இல்லம்' கட்டப்படும் என்று அறிவித்தேன். பலரும் என்னிடம் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள்.

இதேபோல், நம்முடைய திராவிட மாடல் அரசில் ஏராளமான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து, இஸ்லாமிய மக்களின் உரிமைகளை காக்க குரல் கொடுத்து வரக்கூடிய இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதே நம்பிக்கையுடன் தான் நீங்களும் சில கோரிக்கைகளை இந்த மாநாட்டு மூலமாக, தீர்மானங்களாக வடித்தெடுத்து சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. என தெரிவித்தார்.




பின்னர், நிகழ்ச்சியில் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்ட மு.க.ஸ்டாலின்,

நெல்லை நூலகத்திற்கு காயிதே மில்லத் பெயர் சூட்டப்படும். சென்னை பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்விருக்கை அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங் களவறிந்தார் நெஞ்சில் கரவு

**விளக்கம்: அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் நிற்கும் அறம் போல் களவு செய்து பழகி அறிந்தவரின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.**

## நமது தேசத்தைக் காப்பாற்றும் ராணுவ வீரர்களுக்கு தலை வணங்குவோம்: ஜெய் ஷா



புதுடெல்லி, மே.11

இந்தியா மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகின்றன. பாகிஸ்தான் ராணுவம் மற்றும் பயங்கரவாத குழுக்கள் இந்திய எல்லைப் பகுதியில் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன. இந்திய ராணுவம் மிகச்சிறப்பாக இந்தத் தாக்குதல்களை தடுத்து நிறுத்தி இருக்கிறது.

இந்நிலையில், லுவான இந்தியாவை உருவாக்கவும் ஒன்றுபடுவோம என ஐசிசி தலைவர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது ,

நமது தாய்நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதில் ராணுவ வீரர்கள் வீரத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்த வார்த்தைகள் போதாது. பயங்கரவாதத்திலிருந்து நமது தேசத்தைக் காப்பாற்றும் ராணுவ வீரர்களுக்கு தலை வணங்குவோம் நமது ஹீரோக்களை கௌரவிக்கவும், வலுவான, ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கவும் ஒன்றுபடுவோம். என தெரிவித்துள்ளார் .

## துருக்கி டிரோன்களை பயன்படுத்தும் பாகிஸ்தான்




லாகூர், மே.11

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது. இருநாடுகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தியாவின் ஜம்முகாஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களை குறிவைத்து பாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், இந்தியா மீது தாக்குதல் நடத்த துருக்கி டிரோன்களை பாகிஸ்தான் பயன்படுத்தியுள்ளது. கடந்த 2 நாட்களாக இந்தியா மீது சுமார் 400 டிரோன்கள் மூலம் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த டிரோன்கள் அனைத்தும் துருக்கியில் தயாரிக்கப்பட்டவையாகும். துப்பாக்கி, வெடி குண்டுகளை சுமந்து சென்று இலக்கை அழிக்கும் வகையிலான அசிஸ் கார்டு சோங்கர் வகை டிரோன்களை பாகிஸ்தானுக்கு துருக்கி வழங்கியுள்ளது. அந்த டிரோன்கள் மூலமே இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை, இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வரும் நிலையில் பாகிஸ்தானுக்கு துருக்கு முழு ஆதரவு அளித்து வருகிறது. பஹல்காம் தாக்குதலுக்கு துருக்கி எந்தவித இரங்கலோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை. மேலும், இக்கட்டான சூழ்நிலையில் பாகிஸ்தானுக்கு முழு ஆதரவு அளிப்பதாக துருக்கி தெரிவித்துள்ளது.

## இந்தியாபாகிஸ்தான் போர் பதற்றம் தணிய வேண்டும்; டொனால்டு டிரம்ப்



வாஷிங்டன், மே.11

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது. இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தியாவின் ஜம்முகாஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களை குறிவைத்து பாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், இந்தியாபாகிஸ்தான் போர் பதற்றம் தணிய வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் கரோலின் லிவிட் கூறியதாவது, இந்தியாபாகிஸ்தான் போர் பதற்றம் விரைவில் தணிய வேண்டுமென ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் விரும்புகிறார். ஜனாதிபதி டிரம்ப் பதவியேற்புக்கு முன்பு பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல்போக்கு நிலவி வருகிறது.

ஆனாலும், இரு நாடுகளின் தலைவர்களுடனும் ஜனாதிபதி டிரம்ப் சிறப்பான உறவு வைத்துள்ளார். மோதலை முடிவுக்கு கொண்டுவருமாறு இரு நாடுகளின் தலைவர்களிடமும் வெளியுறவுத்துறை மந்திரி மார்கோ ரூபியோ வலியுறுத்தி வருகிறார்' என்றார்.

## பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் வழங்க ஐ.எம்.எப். ஒப்புதல்

லாகூர், மே.11

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது. இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தியாவின் ஜம்முகாஷ்மீர்,பஞ்சாப்,ராஜஸ்தான்போன்றமாநிலங்களைகுறிவைத்துபாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், மூழ்கி வரும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ.எம்.எப்.) பாகிஸ்தான் 1 பில்லியல் அமெரிக்க டாலர்கள் கடன் கேட்டிருந்தது. இந்த கடன் வழங்குவது தொடர்பாக மதிப்பாய்வு, வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கவில்லை. ஐ.எம்.எப். வழங்கும் நிதியை பாகிஸ்தான் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துவதாக இந்தியா குற்றஞ்சாட்டியது.

ஆனால், இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் உதவி வழங்க ஐ.எம்.எப். ஒப்புதல் அளித்துள்ளது. அதேவேளை, 1 பில்லியன் டாலர்கள் கடன் உதவி வழங்க அனுமதி அளித்துள்ள ஐ.எம்.எப். அமைப்பிற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் நன்றி தெரிவித்துள்ளார்.

## சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் பிரமாண்ட உணவுவிடுதி திறப்பு விழா

சென்னை, மே 11

சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று புதிய பிரமாண்ட உணவுவிடுதி திறந்து வைப்பு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. சைவ மற்றும் அசைவ வகைகளில் உயர் தர உணவுகளை வழங்கும் இவ்விடுதி, பத்திரிகையாளர்களின் நலனை முன்னிறுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.





இந்நிகழ்வில் சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. A. அருண், IPS அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உணவுவிடுதியை திறந்து வைத்தார். பின்னர் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## வளசரவாக்கம் பகுதியில் பல் மருத்துவ கிளினிக்கை விரிவுபடுத்த பணம் கேட்டு ரூ.27.69 இலட்சம் ஏமாற்றிய பல் மருத்துவர் கைது

சென்னை, கூடுவாஞ்சேரி, ராம்தாஸ் தெருவிலுள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் ஐஸ்வர்யா, பெ/வ.27, க/பெ.சதிஷ்குமார் என்பவர் அவருடைய தோழி மூலம் அறிமுகமான ஆழ்வார் திருநகர், சிதம்பரனார் தெருவில் பல் மருத்துவ கிளினிக் நடத்தி வரும் பல் மருத்துவர் ஹரிஷ் வெங்கடேஸ்வரன் மற்றும் அதனை நிர்வகித்து வரும் வீணா ஆகியோர், இந்த பல் கிளினிக்கை விரிவுபடுத்த பணம் தேவைப்படுவதாகவும், நீங்கள் எங்களது கிளினிக்கை விரிவுபடுத்த பணம் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாகவும் கூறியதன்பேரில், ஐஸ்வர்யாவும், அவரது கணவர் சதிஷ்குமாரும் பல வங்கிகளில் மொத்தம் ரூ.40.69 இலட்சம் கடனாக பெற்று, ஹரிஷ் வெங்கடேஸ்வரன் மற்றும் வீணா ஆகியோரிடம் கொடுத்ததாகவும், பணத்தை பெற்று கொண்ட இருவரும் தங்களுக்கு மாதம் ரூ.1 லட்சம் வீதம் 60 மாதங்கள் தருவதாக கூறி, 13 மாதங்கள் மட்டும் மாதம் ரூ.1 லட்சம் கொடுத்ததாகவும், அதன் பின்னர் பணத்தை தராமல் ஏமாற்றியதாகவும், எங்களை ஏமாற்றிய இருவர்மீதும்நடவடிக்கைஎடுத்துபணத்தை பெற்று தருமாறு ஐஸ்வர்யா, R9 வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.



R9 வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்தது. அதன்பேரில், 27.69 இலட்சம் பணத்தை திரும்ப தராமல் ஏமாற்றிய ஹரிஷ் வெங்கடேஸ்வரன், வ/41, த/பெ.வெங்கடேஸ்வரன், ஜக்கம்மாள் கோயில் தெரு, போஸ்டல் காலனி, சாலிகிராமம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி ஹரிஷ் வெங்கடேஸ்வரன் ஏற்கனவே ஒரு நபரிடம் பண மோசடி செய்தது தொடர்பாக கைதாகி சிறைக்கு சென்றுள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஹரீஷ் வெங்கடேஸ்வரன்விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில்ஆஜர்செய்யப்பட்டுநீதிமன்ற உத்தரவுப்படிசிறையில்அடைக்கப்பட்டார்.

## காரைக்குடியில் 228 தனியார் பள்ளி வாகனங்களைஆய்வு செய்த தேவகோட்டை சப் கலெக்டர்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அழகப்பா கலை அறிவியல் கல்லூரி மைதானத்தில் காரைக்குடியில் உள்ள தனியார் பள்ளிகளின் 228 மாணவர்களை ஏற்றிச்செல்லும் பள்ளி வாகனங்களை தேவகோட்டை சப் கலெக்டர் ஆயுஸ் வெங்கட் மற்றும் காரைக்குடி DSP பார்த்திபன், மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் காரைக்குடி,காரைக்குடி வட்டாட்சியர் ராஜா, ஆகியோர் ஆய்வு செய்தனர். பள்ளிப் பேருந்துகளில் அவசரகால வழி, தீயணைப்பு சாதனங்கள் ,முதலுதவி பெட்டி, பதிவு சான்றிதழ்கள், வண்டி ஆவணங்கள் ,ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை ஆய்வு செய்தனர் பள்ளி வாகன ஓட்டுனர்களுக்கு தீயணைப்பு துறை சார்பிலும் மருத்துவத்துறை சார்பிலும் விழிப்புணர்வு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது இந்த ஆய்வில் 15 வாகனங்களில் குறைபாடுகள் இருந்ததால் அவற்றை பள்ளி திறப்பதற்கு முன்பு சரி செய்ய உத்தரவிடப்பட்டது.


## கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளுவதற்காக மதுரை வந்த தண்ணீருக்கு பூத்தூவி வரவேற்பு

மதுரை, மே.11

மதுரையில் கள்ளழகர் சித்திரை திருவிழா கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளுவதற்காக வைகை அணையில் திறக்கப்பட்ட நீர் மதுரை வந்தடைந்தது பூத்தூவி வரவேற்ற பொதுமக்கள்.

மதுரை மாவட்டம் அழகர்கோயில் கள்ளழகர் சித்திரை திருவிழாவை முன்னிட்டு நாளை கள்ளழகர் புறப்பாடு நடைபெற்று நாளை மறுநாள் கள்ளழகர் எதிர்சேவை நடைபெற்ற பின்னர் 5ஆம் தேதி அதிகாலை கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளும் நிகழ்விற்காக தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து கடந்த 30 ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனையடுத்து 30 ஆம்தேதி முதல் இன்றுவரை 750கன அடி நீரும், நாளை முதல் 5 ஆம் தேதி வரை 500 கன அடி நீரும் திறக்கப்படவுள்ள நிலையில் திறக்கப்பட்ட நீரானது மதுரை மாநகரில் கள்ளழகர் எழுந்தருளும் பகுதிக்கு வந்தடைந்த நிலையில் குண்டோதரன் வேடம் அணிந்து வைகை அன்னையை வரவேற்கும் விதமாக மலர் தூவியும் வைகை ஆற்றை போற்றி வைகை நதி ஆரத்தி பாடல் பாடியும் ஏராளமான பொதுமக்கள் வரவேற்றனர். முன்னதாக மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு சொந்தமான தீர்த்த கிணற்றிலிருந்து புனித நீரை எடுத்து வைகை ஆற்றில் தெளித்தும், சிறப்பு பூஜைகள் மற்றும் தீப ஆராதனை செய்து நீரை வரவேற்றனர். இதில் வைகை நதி மக்கள் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினரும், சமூக ஆர்வலர்கள், பெண்கள், சிறுமிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.



தினகனி



# விழுப்புரத்தில் 10,032 போலி மதுபாட்டில்கள் பறிமுதல்

விழுப்புரம், மே.11

விழுப்புரத்தில் 209 பெட்டிகளில் 10,032 போலி மதுபாட்டில்கள் (1,806 லிட்டர்) அமலாக்கப் பிரிவு புலனாய்வுத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"அமலாக்கப் பிரிவு புலனாய்வுத் துறை மாநிலம் முழுவதும் சட்டவிரோத மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அமலாக்கப் பிரிவு புலனாய்வு துறை, தமிழகத்தில் கள்ளச்சாராயம், போலி மதுபானம், எரிசாராயம் போன்ற அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களின் புழக்கத்தை கட்டுப்படுத்த, தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தை மிகவும் உறுதியாக அமல்படுத்தி வருகிறது.

முதன்மையாக, போலி மதுபானம் தயாரிப்பு கூடங்கள், சட்டவிரோதமான மதுபானங்கள் தயாரிக்கும் இடங்கள், போலி மதுபான வர்த்தகம், பிற மாநில மதுபானங்கள் கடத்தல்களை தடுக்க தொடர் கண்காணிப்பு மற்றும் வேட்டைகள் நடத்தி வருகிறது.



அமலாக்கப் பிரிவு புலனாய்வுத் துறை தற்போது மிக நுணுக்கமான நுண்ணறிவு தகவல்களை சேகரித்து,உடனடி மற்றும் தொடர் நடவடிக்கையால் சமீபத்தில் சென்னை, விழுப்புரம், வேலூர், கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் சட்டவிரோதமாக கடத்தப்படும் மதுபாட்டில்கள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மத்திய நுண்ணறிவு பிரிவு (CIU) காவல் ஆய்வாளர் தலைமையில் பூத்துறைகாவல்சோதனை சாவடி அருகே வாகன சோதனையின் போது ஈச்சர் வாகனம் ஒன்றை நிறுத்தி ஆய்வு செய்த போது, அதில் போலி மதுபானம் 209 பெட்டிகளில் 10,032 மது பாட்டில்கள் (1,806 லிட்டர்) பறிமுதல் செய்தனர்.

தற்போதைய விசாரணையில், சென்னை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் விற்பனை செய்வதற்காக, பாண்டிச்சேரியில் இருந்து போலி மதுபானம் கடத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.

இவ்வழக்கில் முதன்மையான குற்றவாளி பாண்டிச்சேரியை சேர்ந்த தொடர் குற்றவாளி என தெரிய வந்துள்ளது. அவர்கள் டாட்டா இண்டிகோ வாகனம் ஒன்றை முன்வழி பாதுகாப்பிற்காக பயன்படுத்தியுள்ளனர். இரண்டு வாகனங்களுடன் போலி மது பாட்டில்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற சட்டவிரோத மதுபான வர்த்தகங்களை தடுக்கும் நோக்கில், துறை தொடர்ந்து கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. பொது மக்கள் சட்டவிரோத மதுபான வர்த்தகம் தொடர்பான தகவல்களை இலவச தொலைபேசி எண். 10581 அல்லது CUG எண்.9498410581 என்ற எண்ணிற்கு தகவல் வழங்கலாம். வழங்கப்படும் அனைத்து தகவல்களும் ரகசியமாக பாதுகாக்கப்படும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொடைக்கானலில் இறந்த குட்டியுடன் சுற்றித்திரியும் தாய் குரங்கு

கொடைக்கானல், மே.11

கொடைக்கானலில் தனது குட்டி இறந்துவிட்டது என்பது கூட தெரியாமல் அதனை தூக்கிக்கொண்டு ஒரு குரங்கு சுற்றித்திரியும் சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கொடைக்கானல் வனப்பகுதியில் உள்ள முக்கிய சுற்றுலா இடமான பைன்மரக்காடு பகுதியில் தான் அந்த குரங்கு, தனது குட்டியுடன் சுற்றித்திரிந்தது.

அப்போது குட்டி குரங்கு பெரிய மரத்தில் இருந்து தவறி கீழே விழுந்தது. இதில், அந்த குட்டி குரங்கு இறந்து விட்டது. ஆனால் குட்டி இறந்தது தெரியாமல் தாய் குரங்கு, அதனை தனது அரவணைப்பில் வைத்துக்கொண்டு வனப்பகுதி முழுவதும் சுற்றித்திரிகிறது. அந்த குரங்கை பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் பரிதாபத்துடன் பார்த்துச்செல்கின்றனர்.



இதுகுறித்து பொதுமக்கள் சிலர் கூறுகையில், "குட்டிகள் இறந்தாலும் கூட தாய் குரங்குகளுக்கு அது தெரியாத காரணத்தால் தன்னுடைய அரவணைப்பிலேயே வைத்துக்கொள்ளும். உடல் அழுகி, அதற்குரிய வாசனை வெளியே வந்த பின்னர் தான் தாய் குரங்கு அதனை அகற்றும்" என்றனர்.

# தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையைச் சிதைக்கும் மத்திய அரசின் கனவு ஒரு நாளும் பலிக்காது த.வெ.க.

சென்னை மே.11

தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ராஜ்மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



'மும்மொழிக் கொள்கை' உட்பட, தேசியக் கல்விக் கொள்கையை அமல்படுத்தத் தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி, பா.ஜ.க. உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த பொது நல வழக்கை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்துள்ளது. மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் 32 வது பிரிவின் கீழ் எந்தவொரு மாநிலத்தையும் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்த கோர்ட்டு எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. மாநில அரசு புதிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்தாதது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் அல்ல என்றும் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

தேசியக் கல்விக் கொள்கை வழியாக மும்மொழிக் கொள்கையைத் திணிக்க முயலும் மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு இன்று எதிர்ப்பு தெரிவித்ததுடன், இதில் எந்த மாநிலத்தையும் வற்புறுத்த முடியாது என்ற நிலைப்பாட்டையும் தெளிவாக விளக்கியுள்ளது. சுப்ரீம் கோர்ட்டின் இந்த முடிவைத் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் சார்பில் வரவேற்கிறோம்.

மாநில சுயாட்சி உரிமைக்கு எதிராக ஒரு மாநில அரசின் மொழிக் கொள்கையை, கல்விக் கொள்கையைக் கேள்விக் குறியாக்கி வேறு மொழியை வலுக்கட்டாயமாக அரசியல் ரீதியாகத் திணிப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது. இந்தத் தீர்மானம், அண்மையில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், முரட்டுப் பிடிவாதத்துடன் மும்மொழிக் கொள்கையைத் திணிக்க முயலும் மத்திய அரசுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்ததுடன், தமிழ்நாட்டுக்கு எப்போதும் இருமொழிக் கொள்கைதான் என்பதை எங்கள் கழகப் பொதுக்குழு திட்டவட்டமாக அறிவித்தது.

முற்போக்குச் சிந்தனைகள் மற்றும் தொலைநோக்கு இலக்குகளுடன் செயல்படும் தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையைத் திணிக்க முடியாது. இருமொழிக் கொள்கை வெற்றிப் பாதையை அமைத்திருப்பதால் தமிழகத்தில் மாணவ, மாணவிகள் உயர்கல்வி கற்று உலகின் பல பகுதிகளில் புகழ் பெற்று மிளிர்ந்து வருகிறார்கள்.

இருமொழிக் கொள்கையால் தமிழ்நாடு அடைந்திருக்கும் முன்னேற்றங்களை, பல மாநில அரசுகள் பாராட்டி வருகின்றன. இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் இன்றைய முடிவு, மத்திய அரசுக்குப் பாடமாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இனியும் வேறு மொழிகளை மாநில அரசுகள் மீது கட்டாயமாகத் திணிக்க முடியாது. தேசியக் கல்விக் கொள்கையைத் திணிக்கும் மத்திய அரசின் கனவு, தமிழகத்தில் என்றைக்கும் பலிக்காது.

எனவே, தேசியக் கல்விக் கொள்கை, மும்மொழிக் கொள்கை என்று தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு அழுத்தம் தரும் அரசியல் உள்நோக்கத்தை மத்திய அரசு கைவிட வேண்டும். மாநில அரசுகள் தெரிவித்து வரும் ஆக்கப்பூர்வமான கோரிக்கைகளுக்குத் தீர்வு காண மத்திய அரசு முயல வேண்டும். இதைத் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் வழிகாட்டுதலின் பேரில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# விரைவில் பயன்பாட்டுக்கு வரும் புதிய மினி பேருந்து திட்டம்

சென்னை, மே.11

தமிழ்நாடு முழுவதும் புதிய ஒருங்கிணைந்த மினி பேருந்து திட்டம் வரும் ஜூன் 15ம் தேதி முதல் அமல்படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

.தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1,842 புதிய மினி பேருந்துகளை இயக்குவதற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி, புதிய ஒருங்கிணைந்த மினி பேருந்து திட்டத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.



# மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு: காவல் ஆணையர் அருண்

சென்னை, மே11

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இதைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்து போர் பதற்றம் உருவாகியது. அந்த வகையில் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் மீது பாகிஸ்தான் நேற்று திடீர் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. எல்லையில் இரு நாடுகளுக்கும்இடையேதொடர்ந்து துப்பாக்கி சண்டை நீடித்து வருகிறது. இதனால், இரு தரப்புக்கும் இடையே கிட்டத்தட்ட போர் உருவாகி உள்ளது. இரு நாடுகளும் மோதலை தவிர்க்குமாறு பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.



இந்த நிலையில் மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

சென்னையில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது; சென்னையில் இரவு நேரத்தில் தீவிர வாகன சோதனை நடைபெற்று வருகிறது .

சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்கு வந்த வெடிகுண்டு மிரட்டல் குறித்து விசாரணை நடைபெறுகிறது. என தெரிவித்தார்.

# நெல்லையில் மனைவியை தாக்கி மிரட்டிய கணவன் கைது

திருநெல்வேலி மே.11

நெல்லை மாவட்டம், கூடங்குளம், செட்டிகுளம் கீழ பேருந்து நிலையத்தை சேர்ந்த தினேஷ்குமார் (30) என்பவரும் ஜென்சி(25) என்பவரும் கணவன் மனைவி ஆவர். இருவருக்கும் திருமணம் ஆகி 2 வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லாத காரணத்தினால், அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் தினேஷ் ஜென்சியிடம் சரிவர பேசாமல் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் 5.5.2025 அன்று ஜென்சி தனது அம்மா வீட்டிலிருந்துதினேஷின்வீட்டிற்கு சென்று ஏன் என்னிடம் பேசவில்லை என்று கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த தினேஷ் ஜென்சியை பெண்ணென்றும் பாராமல் அவதூறாக பேசி பைக் சாவியால் தாக்கி மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து ஜென்சி கூடங்குளம்காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் சூசையம்மாள் கிருபா வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு தினேஷை 6.5.2025 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# அய்யர்மலை ரெத்தினகிரீஸ்வரர் கோவில் தேரோட்டம்

கரூர், மே.11

குளித்தலை அருகே அய்யர்மலையில் உள்ள ரெத்தினகிரீஸ்வரர் கோவில், காவிரியின் தென்கரையில் அமையப்பெற்றுள்ள சிவ தலங்களில் முதன்மையானது. பாடல் பெற்ற சிவத்தலமான இந்த கோவிலில் ஆண்டு தோறும் சித்திரை மாதம் விமரிசையாக திருவிழா மற்றும் தேரோட்டம் நடத்தப்படும்.

அவ்வகையில் நடப்பாண்டு சித்திரை திருவிழாவிற்காக ஏப்ரல் 25ந் தேதி முகூர்த்தகால் ஊன்றப்பட்டது. இதையடுத்து மே 1ந் தேதி இக்கோவில் மலையின்உச்சியில்உள்ள கோவில் கொடி கம்பத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு திருவிழாவிற்கான கொடி ஏற்றப்பட்டது. பின்னர் அன்று இரவு புஷ்ப விமானத்தில் சுவாமி புறப்பாடு நடைபெற்றது. கடந்த 5ந் தேதி திருக்கல்யாணம் மற்றும் சுந்தரருக்கு பொற்கிழி யளித்தல் நிகழ்ச்சி நடந்தது.



திருவிழா தொடங்கியதில் இருந்து ஒவ்வொரு நாளும் வாகன சேவை நடைபெற்றது. சுரும்பார்குழலி உடனுறை ரெத்தினகிரீஸ்வரர் வாகனத்தில் எழுந்தருளி 4 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட இக்கோவில் மலையை சுற்றி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று காலை தொடங்கியது. இதையொட்டி சுரும்பார்குழலி உடனுறை ரெத்தினகிரீஸ்வரர் உற்சவ சுவாமிகளுக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டது. பூக்களால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதையடுத்து அலங்கரிங்கப்பட்ட தேரில் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். அதன்பின்னர் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், இந்து சமய அறநிலைத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் வடம் பிடித்து இழுத்து தேராட்டத்தை தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த பொருட்களை கோவில் தேரிலும், தேர் செல்லும் பகுதிகளிலும் கொட்டி வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

பலர் மலை உச்சிக்கு சென்று சுவாமியை வழிபட்டனர். இத்திருவிழாவையொட்டி இக்கோவிலை சுற்றியுள்ள பகுதிகளில் பல்வேறு அமைப்புகள், பொதுமக்கள் சார்பில் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

கோவிலில் இருந்து இன்று காலை புறப்பட்ட தேர் மீண்டும் நாளை மறு நாள் (ஞாயிற்றுக்கிழமை) மாலை அதன் நிலையை அடைய உள்ளது.

# நெல்லையில் தொழிலாளியிடம் அரிவாளை காட்டி கொலை மிரட்டல்: வாலிபர் கைது

திருநெல்வேலி மே.11

திருநெல்வேலி மாநகரம், பேட்டை, எம்.ஜி.ஆர் நகரில் உள்ள டாஸ்மாக் பாரில் மனுதாரரான திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி, தீன்நகரை சேர்ந்த ஜமாலுதீன் மகன் பஷீர்இப்ராகிம் (வயது 31) என்பவரும், பேட்டை மயிலப்பபுரம், நடுத்தெருவை சேர்ந்த சண்முகையா மகன் மாடசாமி(எ) மதன்(24) என்பவரும் ஒன்றாக வேலை பார்த்து வந்தனர். இந்த நிலையில் சம்பளம் சரிவர தராததால் பஷீர் இப்ராகிம் வேலையை விட்டு நின்று விட்டதாககூறப்படுகிறது. அதற்கு உடன் பணிபுரிந்த மாடசாமி(எ) மதன் பஷீர் இப்ராகிமை மீண்டும் வேலைக்கு தொலைபேசியில் அழைத்தபோது, அழைப்பை ஏற்காததால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (7.5.2025) பேட்டை ஐ.டி.ஐ. பேருந்து நிறுத்தம் அருகே பஷீர்இப்ராகிம் நடந்து சென்ற போது வழிமறித்து போன் போட்டால் எடுக்க மாட்டியா என்று மாடசாமி அசிங்கமாக பேசியதோடு, மறைத்து வைத்திருந்த அரிவாளைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து பஷீர்இப்ராகிம் கொடுத்த புகாரின் பேரில் பேட்டை காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து மாடசாமி(எ) மதனை கைது செய்து விசாரணை செய்தனர்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை

நெல்லை, மே.11

இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதட்டம் அதிகரித்துள்ள நிலையில் பாகிஸ்தானில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டு வருகின்றன. மேலும் பாகிஸ்தானின் தாக்குதலை முறியடிக்கும் வகையில் இந்திய எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை தொடங்கியது. மாவட்ட பேரிடர் மேலாண்மை குழுதலைவரான கலெக்டர் சுகுமார் தலைமையில் போர் சூழல் ஒத்திகை நடக்கிறது. அணுமின் நிலைய பாதுகாப்பு, அவசரகால செயல்முறைகள் குறித்து ஒத்திகை நடைபெற்று வருகிறது. அதேபோல சென்னையில் உள்ள கல்பாக்கம் அணுமின் நிலையத்திலும் பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்று வருகிறது.



பாதுகாப்பு ஒத்திகையில், இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை, இந்திய விமானப்படை, தமிழக போலீஸ், தேசிய பேரிடர் மீட்புப் படை, எண்ணெய் கையகப்படுத்தும் அமைப்புகள், சென்னை மாவட்ட நிர்வாகம் மற்றும் துறைமுக பணியாளர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்

# மும்மொழி கொள்கையை அமல்படுத்த கோரிய மனு தள்ளுபடி: சுப்ரீம் கோர்ட்டு முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்டு வரவேற்பு

சென்னை மே.11

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம் மாநிலங்களில் மும்மொழி கொள்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்துள்ளது. சுப்ரீம் கோர்ட்டின் இந்த முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பா.ஜ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ். மணி, தேசிய கல்விக் கொள்கைப் படி தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்க மாநிலங்களில் மும்மொழி கொள்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என்று பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார்.



பொது நல மனுவை இன்று 09.05.2025 ஆம் தேதி விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, மாநில அரசு, தேசிய கல்விக்கொள்கையை செயல்படுத்தாதது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் அல்ல எனவும் கருத்து தெரிவித்து, பொது நல மனுவை தள்ளுபடி செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாலை தோண்டும் போது மின்புதைவடங்கள் பாதிக்கபடாத வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் - மின்வாரிய தலைவர் வேண்டுகோள்

சென்னை, மே.11

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

சென்னை மற்றும் அதை சுற்றிஉள்ள பகுதிகளில் கடந்த சில வாரங்களாக சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, மெட்ரோ ரயில், குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மற்றும் தனியார் ஒப்பந்ததாரர்கள் அவர்களின் பணிகளை மேற்கொள்ளும் பொழுது மின் வாரியத்தின் புதைவடங்களை பழுது செய்து விடுகிறார்கள். இதனால் சென்னை மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் முக்கியமாக இரவு நேரங்களில் தேவையற்ற மின்தடை ஏற்பட்டு மின் நுகர்வோர்க்கு பாதிப்பு ஏற்படுகிறது.

இதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின் வாரிய தலைவர் ஜெ. ராதா கிருஷ்ணன், அவர்களின் தலைமையில் விரிவான கலந்தாய்வு கூட்டம் நெடுஞ்சாலைத் துறை ,மெட்ரோ ரெயில் , குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மற்றும் துறை உயர் அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்களுடன் நடைபெற்றது. மின்வாரியத்தின் தலைவர் அவர்கள் துறை அதிகாரிகளிடம் சாலை தோண்டும் பணிகளை மேற்கொள்ளும் பொழுது இனிவரும் காலங்களில் மின்புதைவடங்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பணிகளை சம்பந்தப்பட்டதுறையினர் ஒருங்கிணைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறித்தினார். மேலும் பணிகளை மேற்கொள்வதற்கு முன்பாக புதைவட வரைபடங்களை மின்வாரியத்திடமிருந்து பெற்றுக்கொண்டு அதற்கேற்ப பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

மேலும் பணிகளை மேற்கொள்ளும் பொழுது புதைவடங்கள் இருந்தால் உடனேபணிகளைநிறுத்தி அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் அந்த புடைவடத்தின் மின்பாதை தகவல்களை பெற்றுகொள்ள அறிவுறுத்தினார். அவ்வாறு செய்வதால் பணிகள்செய்யும் பொழுது ஏற்படும் மின்விபத்துகள் மற்றும் பொது மக்களுக்கு மின்தடை பாதிப்பு ஏற்படமால் தவிர்க்க முடியும் என்றும் மின்வாரிய தலைவர் அறிவுறித்தினார். எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

# பண்ருட்டியில் பள்ளிவாசல் கட்ட அனுமதிக்கும் அரசாணைக்கு எதிராக மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை: எஸ்டிபிஜ கண்டனம்

சென்னை, மே.11

எஸ்டிபிஜ கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி, வடகைலாசம் பகுதியில் 470க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றனர். இப்பகுதியில், சொந்த பட்டா நிலத்தில் இஸ்லாமிய சமுதாய மக்களின் மார்க்க கல்வி மற்றும் வழிபாட்டுக்காக, அரபி ஆரம்பப் பாடசாலையுடன் கூடிய பள்ளிவாசல் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக மாவட்ட நிர்வாகம் பள்ளிவாசல் கட்டுமானத்திற்கான அனுமதியை தாமதப்படுத்தி, நிர்வாகத்தினரை அலைக்கழிப்பது கண்டனத்திற்குரியது.

பண்ருட்டி வட்டாட்சியர், பள்ளிவாசல் கட்டப்படவுள்ள இடத்தைச் சுற்றி முஸ்லிம் சமூகத்தினர் அதிகம் வசிப்பதாகவும், இப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எதுவும் இல்லைஎனவும்அறிக்கை அளித்துள்ளார். ஆனால், காவல்துறை சட்டம் ஒழுங்கு பிரச்சினை இருப்பதாக கூறி பள்ளிவாசல் கட்டுமானத்திற்கு தடை ஏற்படுத்துவது ஏற்புடையதல்ல. பள்ளிவாசல் கட்டுவதற்கான சட்ட வழிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு, கட்டுமானத்திற்கு அரசாணை பிறப்பித்து அனுமதியும் அளிக்கப்பட்ட நிலையில், மாவட்ட நிர்வாகத்தின் தேவையற்ற தாமதம், அரசாணையையும் முதல்வரின் உத்தரவையும் மதிக்காத செயலாக உள்ளது. இது



சிறுபான்மை மக்களின் அரசியலமைப்பு உரிமையான வழிபாட்டு உரிமையை பறிப்பதுடன், அவர்களின் மார்க்க கல்வி வளர்ச்சியையும் பாதிக்கிறது. அரசு அனுமதி வழங்கியும் பள்ளிவாசல் கட்டுவதற்கு தடை ஏற்படுத்தும் இத்தகைய மதச்சார்பின்மைக்கு எதிரான செயல்கள், அரசியலமைப்பிற்கு எதிரானவை.

ஆகவே, தமிழக முதல்வர் இவ்விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு, வடகைலாசம் பள்ளிவாசல் கட்டுமானத்திற்கு அனுமதி வழங்கி, அரசாணையை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். மேலும், தமிழகம் முழுவதும் சொந்த பட்டா நிலங்களில் பள்ளிவாசல் கட்டுவதற்கு ஏற்பட்டுள்ள இது போன்ற தடைகளை நீக்கி, சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாக்க தனிக்கவனம் செலுத்த வேண்டும் என தமிழக முதல்அமைச்சரை கேட்டுக்கொள்கிறோம். எஸ்டிபிஜ கட்சி, பண்ருட்டி பள்ளிவாசல் உட்பட சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமைக்காக நடைபெறும் அனைத்து அறவழிப் போராட்டங்களுக்கும் முழு ஆதரவு அளிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பெட்ரோல் டேங்கர் லாரியும் அரிசி ஏற்றி வந்த லாரியும் நேருக்கு நேர் மோதி விபத்து




கடலூர், மே.11

பெட்ரோல் டேங்கர் லாரி ஒன்று பெட்ரோல் முழுவதும்நிரம்பியநிலையில் தர்மபுரியில் இருந்து குமராட்சி நோக்கி நேற்று அதிகாலைசென்றுகொண்டிருந்தது. இந்த லாரியை நல்லூர் நகரை சேர்ந்த ராமச்சந்திரன் (62), என்பவர் ஓட்டி சென்று கொண்டிருந்தார். இதேபோல சேலத்தை சேர்ந்த நாச்சிமுத்து (62), என்பவர் கடலூரில் இருந்து சேலம் நோக்கி லாரியில் அரிசி மூட்டைகளை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

இரண்டு லாரிகளும் விருத்தாசலம் அருகே உள்ள தொரவலூர் கிராமத்தின் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது அரிசி ஏற்றிச்சென்ற லாரியின் டிரைவரான நாச்சிமுத்து தூங்கிவிட்டதாக கூறப்படுகிறது. இதனால் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த அரிசி லாரி திடீரென எதிரே வந்த பெட்ரோல் டேங்கர் லாரி மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் 2 லாரிகளின் முன்பக்கமும் பலத்த சேதமடைந்தது. இதில் அரிசி ஏற்றிச் சென்ற டிரைவர் நாச்சிமுத்து சம்பவ இடத்திலேயே பலியானார். டேங்கர் லாரியும் பலத்த சேதம் அடைந்திருந்ததால் பெட்ரோல் சாலையில் ஊற்றியது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் கிடைத்து விரைந்து சென்ற விருத்தாசலம் தீயணைப்புத்துறை நிலைய அலுவலர் சங்கர் தலைமையிலான வீரர்கள் பெட்ரோல் டேங்கர் லாரி மீது தண்ணீரை பீய்ச்சி அடித்ததுடன், பெட்ரோல் ஒழுகுவதையும் அடைத்து .

ஏதும் அசம்பாவிதம் ஏற்படாமல் தடுத்தனர். தொடர்ந்து அங்கு வந்த விருத்தாசலம் போலீசார் லாரியின் இடிபாடுகளில் சிக்கி கிடந்த டிரைவர் நாச்சிமுத்து உடலை மீட்டு விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த விபத்தில் பெட்ரோல் டேங்கர் லாரி டிரைவர் ராமச்சந்திரன் லேசான காயங்களுடன் உயிர் தப்பினார்.

இந்த விபத்தால் அப்பகுதியில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 17 வயது சிறுமியை கடத்தி பாலியல் வன்கொடுமை: வாலிபர் கைது

தஞ்சை, மே.11

தஞ்சை மாவட்டம் மெடிக்கல்காலேஜ் ரோடு, ராஜப்பா நகர் பகுதியை சேர்ந்தவர் சசிகுமார். இவருடைய மகன் வசந்த் (வயது 26). கூலித்தொழிலாளி. இவருக்கு திருமணமாகி விட்டது.

இவருடைய உறவினர்கள் ஈரோட்டில் உள்ளனர். இதனால் உறவினர்களை பார்க்க ஈரோட்டுக்கு வசந்த் வந்தபோது அவருக்கு இங்கு கூலி வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறு வேலை செய்து வந்த அவருக்கும் ஈரோட்டை சேர்ந்த 17 வயது சிறுமிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. மேலும் திருமண ஆசை காட்டி அவர் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் சிறுமியை ஈரோட்டில் இருந்து கடத்திச்சென்றார். இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் மொடக்குறிச்சி போலீசில் புகார் செய்தனர். இந்தநிலையில் சிறுமியுடன் தஞ்சையில் வசந்த் தங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் தஞ்சைக்கு போலீசார் சென்று வசந்தை பிடித்ததுடன், அங்கிருந்த சிறுமியை மீட்டு ஈரோட்டுக்கு அழைத்து வந்தனர்.

இதையடுத்து போலீசார் நடத்திய விசாரணையில் சிறுமியை வசந்த் 2வது திருமணம் செய்யும் எண்ணத்தில் கடத்தி சென்றது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து வசந்த் மீது போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்தனர்.

# 12ம் வகுப்பு தேர்வில் தோல்வி: கல்குவாரி குட்டையில் குதித்து மாணவர் தற்கொலை

காஞ்சிபுரம், மே.11

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் அருகே உள்ள நந்தம்பாக்கம் பெரியார் நகரைச் சேர்ந்தவர் இயேசு பாதம். இவரது மகன் எடிசன் (17 வயது). சோமங்கலம் அரசு மேல்நிலை பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். அண்மையில் நடைபெற்ற 12ம் வகுப்பு தேர்வை எடிசன் எழுதி உள்ளார். இந்த நிலையில் நேற்று இதற்கான தேர்வு முடிவுகள் வெளிவந்த நிலையில், எடிசன் குறைந்த மதிப்பெண் பெற்று தோல்வி அடைந்தார்.



இதனால் எடிசன் கடும் மனஉளைச்சலில் இருந்து வந்ததாக தெரிகிறது. நேற்று வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துகொண்டு எடிசன் வெளியே சென்றார். நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் அவரை பல இடங்களில் தேடினர்.

இந்த நிலையில் சோமங்கலம் அருகே உள்ள நடுவீரப்பட்டு கல்குவாரி பகுதியில் மோட்டார் சைக்கிள், செருப்புகள் கிடப்பது அந்த பகுதி மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியது. இது குறித்து தகவலறிந்த எடிசனின் பெற்றோர், உறவினர்கள் சோமங்கலம் அருகே உள்ள கல்குவாரி பகுதிக்கு விரைந்தனர். இதுகுறித்து சோமங்கலம் போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசாரும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். இது தொடர்பாக சோமங்கலம் போலீசார் படப்பை தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப்பு துறையினர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தேடி எடிசனின் உடலை மீட்டனர். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்செந்தூர் கோவிலில் உண்டியல் வருமானம் ரூ.3.22 கோடி



திருச்செந்தூர், மே.11

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

அவ்வாறு கோவிலுக்கு வரும் பக்தர்கள் அங்குள்ள உண்டியல்களில் பணம், நகை, தங்கம், வெள்ளி உள்ளிட்டவற்றை காணிக்கையாக செலுத்துகின்றனர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் உண்டியல் வருமானம் மாதந்தோறும் எண்ணப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று கோவில் வசந்த மண்டபத்தில் உண்டியல்கள் திறந்து எண்ணும் பணி நடந்தது.

இதில்ரூ.3கோடியே 22 லட்சத்து 12,735ஐ பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர். மேலும் 1.37 கிலோ தங்கம், 51 கிலோ 100 கிராம் வெள்ளி மற்றும் வெளிநாட்டு பணம் 980ம் காணிக்கையாக செலுத்தப்பட்டு இருந்தது.

# காரைக்காலில் மறு உத்தரவு வரும் வரை டிரோன்கள் பறக்கத் தடை

காரைக்கால், மே.11

காரைக்கால் மாவட்ட கலெக்டர் அப்பாராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இந்தியா பாகிஸ்தான் இடையே நிலவும் அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு மத்திய உள்துறை அமைச்சகம் வழங்கிய கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் அடிப்படையில் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள காரைக்கால் துறைமுகம், ஓ.என்.ஜி.சி, புதுச்சேரி மின்திறல் குழுமம், உள்ளிட்ட பெரிய தொழிற்சாலைகள், அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவ கட்டிடங்கள் உள்ளிட்ட பகுதிகளின் மேலே மறு உத்தரவு வரும் வரை டிரோன்கள் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது .

# சித்திரைத் திருவிழா: தாம்பரம்-மதுரை இடையே சிறப்பு ரெயில் இயக்கம்

சென்னை, மே.11

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலில் புகழ்பெற்ற சித்திரைத் திருவிழா கடந்த மாதம் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் மதுரை சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் தாம்பரம் மதுரை இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படும் என்று தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி தாம்பரத்தில் இருந்து நாளை(மே 10) இரவு 11.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில், மறுநாள் காலை 7.55 மணிக்கு மதுரை



சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மறுமார்க்கமாக மே 12ம் தேதி இரவு 11.30 மணிக்கு மதுரையில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 7.50 மணிக்கு தாம்பரம் வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு ரெயிலுக்கான முன்பதிவு இன்று மாலை 6 மணிக்கு தொடங்கியுள்ளது.

# கோடை விடுமுறை: கன்னியாகுமரியில் காலை 7 மணி முதல் படகு சேவை

கன்னியாகுமரி மே.11

சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆண்டு முழுவதும் இங்கு சுற்றுலா பயணிகள் வந்து சென்றாலும் ஏப்ரல் மற்றும் மே மாதம் கோடைக்கால சீசனாக கருதப்படுகிறது. இந்த சீசனில் தற்போது குடும்பம், குடும்பமாக சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.



கன்னியாகுமரி சுவாமி விவேகானந்தர் மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் படகு சேவையை நடத்தி வருகிறது. தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை சேவை வழங்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில்கோடை விடுமுறையில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் இன்று முதல்(மே 9) படகு சேவை காலை 7 மணிக்கு தொடங்கும் என்று பூம்புகார் நிறுவனம் அறிவித்திருந்தது. அதன்படி இன்று காலை 7 மணிக்கு படகு சேவை தொடங்கியது.

# தூத்துக்குடியில் 2 இடங்களில் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை




சென்னை, மே.11

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் படி, கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம் அலகு 2, அத்திப்பட்டு ஆகிய இடங்களில் இன்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை போர்க்கால பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை நடத்தப்பட்டது. இந்த ஒத்திகையின்போது விமான தாக்குதலை எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை குறித்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும் பாதுகாப்பு, வெளியேற்றம் மற்றும் முதலுதவி தொடர்பான பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

மாநில அவசரகால செயல்பாட்டு மையம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையம், கூடங்குளம் அணுமின் நிலையம், மற்றும் வடசென்னை அனல் மின் நிலையம் ஆகியவற்றில் உள்ள கட்டுப்பாட்டு அறைகள் மூலம் பயிற்சிகள் கண்காணிப்பட்டது. மாவட்ட அதிகாரிகள், மாநில அதிரடிப்படை, ஊர்க்காவல் படையினர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப்படை, மத்திய தொழில் துறை பாதுகாப்புப் படை மற்றும் மருத்துவக்குழுக்கள் இந்த மாதிரிப் பயிற்சியில் பங்கேற்றனர்.

இதன் தொடர்ச்சியாக, நாளை (சனிக்கிழமை) போர்க்கால பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை, தூத்துக்குடி வ.ஊ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆகிய இடங்களில் மாலை 04.00 மணியளவில் நடக்க உள்ளது. இந்த பயிற்சியின்போது எதிரிகளின் தாக்குதல் மற்றும் எவ்விதமான அவசரக்கால சூழலையும் எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை பரிசோதிக்கப்படும்.

இந்த பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய இடங்களில் ஆயத்த நிலையினை சரிபார்த்துக் கொள்வதற்கான ஒரு ஒத்திகை மட்டுமே ஆகும். மற்ற இடங்களில் உள்ள அனைத்து செயல்பாடுகளும் வழக்கம்போல இயங்கும். இப்பயிற்சி குறித்து பொதுமக்கள் எவ்வித பதற்றமோ அல்லது அச்சமோ கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதிய போப்புக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

உலகம் முழுவதும் உள்ள 140 கோடி கத்தோலிக்கர்களின் தலைவராக இருந்த போப் பிரான்சிஸ் கடந்த மாதம் 21ந் தேதி உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார். இதையடுத்து புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்வதற்கான கார்டினல் கான்கிளேவ் எனப்படும் கர்தினால் மாநாடு நடைபெற்றது. இதில், அமெரிக்காவை சேர்ந்த கார்டினல் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் கத்தோலிக்கர்களின் 267வது போப் ஆண்டவராக தேர்வு செய்யப்பட்டார். அவர் போப் 14ம் லியோ என அழைக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது. புதிய போப்புக்கு உலக தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், 267வது போப் ஆண்டவராக தேர்வு செய்யப்பட்ட 14ம் லியோவுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "ரோமன் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய போப் 14ம் லியோவுக்கு வாழ்த்துகள். அமைதி மற்றும் ஒற்றுமை பற்றிய அவரின் செய்தி உலகம் முழுவதும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கட்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# குடும்பத்தகராறு: காதல் திருமணம் செய்த புதுமண தம்பதி எடுத்த விபரீத முடிவு



ஈரோடு, மே.11

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள புதுக்கொத்துக்காடு பகுதியை சேர்ந்தவர் செல்வன். இவருடைய மகன் சந்திரன் (வயது 23). கட்டிட தொழிலாளி. சத்தியமங்கலத்தை அடுத்துள்ள இண்டியம்பாளையம், சின்ன கரடு பகுதியை சேர்ந்தவர் ராக்கிமுத்து. இவருடைய மகள் பிரியதர்ஷினி (19). சந்திரனும், பிரியதர்ஷினியும் காதலித்து கடந்த 7 மாதத்துக்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர். திருமணத்துக்கு பின்னர் 2 பேரும் புதுக்கொத்துக்காடு பகுதியில் தங்கி இருந்து கட்டிட வேலைக்கு சென்று வந்தனர்.

நேற்று முன்தினம் தம்பதி இருவரும் சின்ன கரடில் உள்ள பிரியதர்ஷினியின் பெற்றோர் வீட்டுக்கு சென்றனர். அரசூர் குள்ளம்பாளையம் மாரியம்மன் கோவில் திருவிழாவில் பங்கேற்பதற்காக அவர்கள் சென்றதாக கூறப்படுகிறது. அங்கு தம்பதி இருவரும் பேசிக்கொண்டு இருந்தபோது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. சிறிது நேரத்தில் 2 பேரும் தூங்குவதற்கு சென்றுவிட்டனர்.

இந்தநிலையில், நேற்று காலை அங்குள்ள ஒரு தோட்டத்து கிணற்றில் சந்திரனும், பிரியதர்ஷினியும் பிணமாக மிதந்தனர். இது குறித்த தகவல் கிடைத்ததும் சத்தியமங்கலம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று 2 பேரின் உடல்களையும் கிணற்றுக்குள் இருந்து மீட்டு மேலே கொண்டு வந்தனர். மேலும் கடத்தூர் போலீசார் சம்பவ இடம் சென்று 2 பேரின் உடல்களையும் கைப்பற்றி கோபி அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

போலீசாரின் முதல் கட்ட விசாரணையில், 'நேற்று முன்தினம் சந்திரனுக்கும், பிரியதர்ஷினிக்கும் இடையே குடும்பம் நடத்துவது தொடர்பாக தகராறு ஏற்பட்டுள்ளது. பின்னர் 2 பேரும் தூங்குவதற்காக சென்றாலும், மீண்டும் அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் இரவு நேரம் என்றும் பாராமல் பிரியதர்ஷினி வீட்டைவிட்டு வெளியேறி கிணற்றில் குதித்து தற்கொலை செய்யப்போவதாக கூறிக்கொண்டு சென்றிருக்கிறார்.

அவரை தடுப்பதற்காக சந்திரன் பின்னால் சென்றுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து 2 பேரும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து இருக்கலாம் என தெரிகிறது. கோபத்தில் சென்ற பிரியதர்ஷினி முதலில் குதித்துவிட அவரை காப்பாற்றுவதற்காக சென்ற சந்திரனும் குதித்து 2 பேரும் நீச்சல் தெரியாமல் தண்ணீரில் மூழ்கி மூச்சுத்திணறி இறந்தார்களா? அல்லது வேறு ஏதேனும் காரணங்களா? என்றும் போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

11.5.2025

# 24 மணி நேரமும் கடைகள், வணிக நிறுவனங்கள் திறந்திருக்க அனுமதி



சென்னை, மே.11

தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:

42வது வணிகர் தினத்தையொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் மதுராந்தகத்தில் கடந்த 5ம் தேதி நடைபெற்ற மாநாட்டில், பொதுமக்களின் நலன் கருதி கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அனைத்து நாட்களும் 24 மணி நேரமும் திறந்திருக்க அனுமதி அளித்து வழங்கப்பட்ட அரசாணை, வரும் ஜூன் 4ம் தேதியுடன் முடிவடைவதால் இதனை மேலும், 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து அரசாணை வெளியிடப்படும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்அமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, பொது மக்களின் நலன் கருதி, 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை பணியமர்த்தியுள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் அனுமதி அளிக்கப்பட்டு, 5ம் தேதி முதல் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால், அரசாணை (டி) எண்.207, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 08.05.2025 மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வணிகர்களும், பொதுமக்களும் பயனடைவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (கே2)

# நெல்லையில் பெட்ரோல் பங்க் ஊழியரிடம் ரூ.36 லட்சம் கொள்ளை: 10 பேர் கைது, ரூ.28 லட்சம் மீட்பு




திருநெல்வேலி, மே.11

நெல்லை மாவட்டம், பணகுடி பகுதியில், கடந்த 5.5.2025 அன்று காவல்கிணறு விலக்கு அருகே நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில், தனியார் பெட்ரோல் பங்க் ஊழியர், பெட்ரோல் பங்கில் விற்பனையான பணத்தினை தனது மோட்டார் சைக்கிளில் எடுத்துக் கொண்டு வங்கியில் செலுத்துவதற்காக சென்ற போது, மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத 3 பேர் அவரைத் தாக்கி, அவரிடம் இருந்த ரூ.36 லட்சத்து 6 ஆயிரம் பணத்தை கொள்ளையடித்து தப்பி சென்றனர்.

இது தொடர்பாக பணகுடி காவல் நிலையத்தில் கொள்ளை வழக்கு பதிவு செய்யப்பட்டதையடுத்து, வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேஷ் தலைமையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, குற்றவாளிகளை கண்டறியும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 7.5.2025 அன்று இந்த சம்பவத்தில் தொடர்புடைய 3 நபர்கள் கைது செய்யப்பட்டு, இக்குற்றத்தில் தொடர்புடைய ஒரு இளஞ்சிறாரும் கையகப்படுத்தப்பட்டார். தொடர்ந்து, நேற்று (8.5.2025) முக்கிய குற்றவாளிகள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் ஒரு பெண் குற்றவாளியும் அடங்குவார். இவ்வழக்கில், இன்று (9.5.2025) மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த பணம் கொள்ளை வழக்கில் இதுவரை ஒரு பெண் உட்பட மொத்தம் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒரு இளஞ்சிறார் கையகப்படுத்தப்பட்டுள்ளார். இவ்வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் ராமநாதபுரம்,

மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள்ஆவார்கள். கொள்ளையடிக்கப்பட்ட ரூ.36 லட்சத்து 6 ஆயிரம் பணத்தில் இதுவரை ரூ.28 லட்சத்து 1 ஆயிரம் (இருபத்தெட்டு லட்சத்து ஒரு ஆயிரம் ரூபாய்) பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

குற்ற சம்பவம் நடைபெற்ற சுமார் 50 மணி நேரத்தில் வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டறிந்து, அவர்களை துரிதமாக அடையாளம் கண்டு கைது செய்த வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேஷ் மற்றும் தனிப்படை காவலர்களை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# நாட்டைக் காக்கும் போரில் வீர மரணம் அடைந்த முரளி நாயக்கிற்கு வீரவணக்கம்: அன்புமணி ராமதாஸ்



சென்னை, மே.11

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தஇந்தியராணுவ வீரர் முரளி நாயக், பாகிஸ்தான் நடத்திய தொடர் பீரங்கித் தாக்குதலில் வீரமரணம் அடைந்தார் என்ற செய்தி பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. நம்மைக் காப்பதற்காக இன்னுயிரை ஈந்த அந்த பெருமகனுக்கு எனது வீரவணக்கங்களைசெலுத்துகிறேன்.

பயங்கரவாதிகளின் புகலிடமாகத் திகழும் பாகிஸ்தான் இந்தியா மீது அப்பட்டமாக பயங்கரவாதத் தாக்குதல்களை ஏவி விட்டு வருகிறது. அவற்றிலிருந்து நாட்டையும், நம்மையும் காக்கும் புனிதப் பணியில், தங்களின் உயிரைப் பணயம் வைத்து நமது படைவீரர்கள் ஈடுபட்டுள்ளனர். மிகவும் நெருக்கடியான இந்தக் காலக்கட்டத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு அவர்களுக்கு துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார் .

# பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியை கடித்த நாய்: நடைபயிற்சி சென்றபோது சம்பவம்

சென்னை, மே.11

சென்னை தேனாம்பேட்டையில் மருத்துவ சேவைகள் தேர்வு வாரியம் உள்ளது. இந்த வாரியத்தின் தலைவராக உமா மகேஸ்வரி உள்ளார். ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர் ராயப்பேட்டையில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இன்று காலை தனது கணவருடன் பாலாஜி நகர் முதல் தெருவில் உமா மகேஸ்வரி நடைப்பயிற்சி சென்றார். அப்போது, ஒரு வீட்டில் உள்ள வளர்ப்பு நாய் அவரை 2 முறை கடித்தது. உடனடியாக, மருத்துவமனை சென்று தடுப்பூசி போட்டுக்கொண்ட அவர் வீடு திரும்பினார். நாயின் உரிமையாளரான சுரேஷ் என்பவர் மீது போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நெல்லை: கொலை முயற்சி அடிதடி வழக்குகளில் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது




திருநெல்வேலி, மே.11

நெல்லை மாவட்டம், வீரவநல்லூர் பகுதியில் கொலை முயற்சி மற்றும் அடிதடி வழக்கில் ஈடுபட்ட கொட்டாரக்குறிச்சி, வடக்கு தெருவை சேர்ந்த உச்சிமாகாளி மகன் சங்கர் கணேஷ் (வயது 33), கொட்டாரக்குறிச்சி, மெயின்ரோடு பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் மகாராஜன்(34) ஆகிய 2 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மேற்சொன்ன நபர்கள் கொலை முயற்சி, அடிதடி, வழிப்பறி மற்றும் மோசடி போன்ற வழக்குகளில் ஈடுபட்டு பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக வீரவநல்லூர் இன்ஸ்பெக்டர் சுஜித் ஆனந்த் கவனத்திற்கு வந்தது. இதனையடுத்து அவர் மேற்சொன்ன 2 பேர் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில், மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில், சங்கர்கணேஷ், மகாராஜன்ஆகிய 2 பேரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று (8.5.2025) அடைக்கப்பட்டனர்.

# சங்கரன்கோவில் சித்திரை திருவிழா தேரோட்டம்

சங்கரன்கோவில், மே.11

சங்கரன்கோவில் தேரோட்டத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தேர் இழுத்தனர்.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சங்கரன்கோவில் சங்கர நாராயண சுவாமி கோவிலில் கடந்த 1ம் தேதி முதல் சித்திரை திருவிழா நடைபெற்று வருகிறது. விழா நாட்களில் சுவாமி, அம்பாள் பல்வேறு வாகனங்களில் வீதிஉலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது. தேரோட்டத்தை முன்னிட்டு காலையில் சுவாமி, அம்பாள் தனித்தனி தேரில் எழுந்தருளும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து தேர் வடம் பிடித்தலும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பக்தி முழக்கமிட்டபடி தேர் இழுத்தனர்.

தேரோட்டத்தில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், வருவாய் கோட்டாட்சியர் கவிதா, தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ, அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி, நகராட்சி தலைவி உமா மகேஸ்வரி, நகராட்சி ஆணையாளர் நாகராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# பாரதிராஜா படங்களை பார்ப்பது போன்ற ஒரு உணர்வை மையல் திரைப்படம் காட்டுகிறது ஆர்கே செல்வமணி




ஐகான் சினி கிரியேஷன்ஸ் எல்எல்பி தயாரிப்பில் இயக்குநர் ஏபிஜி ஏழுமலை இயக்கத்தில் நடிகர்கள் சேது, சம்ரிதி நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'மையல்'. இந்தத் திரைப்படத்தின் ஆடியோ மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

மைனா படத்தில் இன்ஸ்பெக்டராக நடித்த நடிகர் சேது இப்படத்தில் நாயகனாக நடித்துள்ளார். படத்தில் பிஎல் தேனப்பன் மற்றும் சூப்பர் குட் சுப்ரமணி ஆகியோர் லீட் கேரக்டர்களில் நடித்துள்ளனர். படத்தின் படப்பிடிப்பு கல்வராயன் மலை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ளன. கிராமத்து கதைக்களத்தில் உருவாகியுள்ள மையல் படத்தின் ரிலீஸ் குறித்த அறிவிப்பு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது

மையல் படம் ஒரு சாதாரண அப்பாவி மனிதனின் உரிமைகள் மற்றும் வாழ்க்கையை நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் சட்ட அமைப்பு எடுத்த தவறான முடிவால் அவரது உண்மையான காதல் சிதைவடைவதை கதைக்களமாக எடுத்துக் கொண்டுள்ளதாக இயக்குநர் ஏழுமலை தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மனிதரின் கொந்தளிப்பான மனநிலையை படம் மையக்கதையாக கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இயக்குநர் ஆர்.கே. செல்வமணி, "இயக்குநர் ஏழுமலைக்கு தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவித்து கொள்கிறோம். புதிய முயற்சியாக இந்தப் படத்தை எடுத்துள்ளார். பாடல் காட்சிகளைப் பார்க்கும்போது பழைய பாரதிராஜா படங்களைப் பார்ப்பது போல இருந்தது. இந்தப் படம் அறிவால் பிரம்மாண்டமாக எடுக்கப்பட்டுள்ளது. ஹீரோயினுக்கும் நம்ம வீட்டுப் பெண் போல அழகு உள்ளது. ஹீரோவுக்கும் நிச்சயம் பெரிய எதிர்காலம் உள்ளது. சிறந்த டெக்னீஷியன்ஸ் தான் சிறந்த படிப்புகளை உருவாக்குகிறார்கள். உருவாக்குவது கடினம். அதை உடைப்பது எளிது. கெட்ட எண்ணம் உள்ளவர்கள் நிர்வாகத்திற்கு வந்துவிட்டால் எல்லாம் முடிந்தது. அடுத்தவர்களைத் தூண்டி விடுவது எளிது. முரண்பாடுகளை சரிசெய்தால் மட்டுமே வேலைகள் சரியாக நடக்கும். சங்கத்தில் பிரச்சினைகள் வரும்போது அதை சரிசெய்யாமல், அடுத்தடுத்து சங்கங்கள் தொடங்கிக் கொண்டே இருந்தால் கடைசி வரை பிரச்சினைகள் முடியாது. இது ஒரு எச்சரிக்கை மணி. அடுத்து எப்படி வேண்டுமானாலும் திருப்பி விடப்படலாம். இந்தப் படத்தின் டெக்னீஷியன்ஸ் தான் இந்தப் படத்தை சிறப்பாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்!". என்றார்.

# "ஜென்ம நட்சத்திரம்" படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு

கடந்த 2024 ஏப்ரல் மாதத்தில் 'ஒரு நொடி' எனும் திரைப்படம் வெளியானது. இந்த படத்தில் தமன்குமார் கதாநாயகனாக நடித்திருந்தார். இவருடன் இணைந்து வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், தீபா சங்கர் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். கிரைம் திரில்லர் ஜானரில் மணிவர்மன் இயக்கத்தில் வெளியான இந்த படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று பல்வேறு தரப்பினர் இடையே பாராட்டுக்களை பெற்றது.

இந்நிலையில் மணிவர்மன் – தமன்குமார் கூட்டணி மீண்டும் ஒரு புதிய படத்தில் இணைந்துள்ளது. இந்த படத்திற்கு 'ஜென்ம நட்சத்திரம்' என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த படத்தில் தமன்குமாருக்கு ஜோடியாக மால்வி மல்கோத்ரா நடித்துள்ளார். மேலும் இவர்களுடன் இணைந்து காளி வெங்கட், முனீஷ்காந்த், தலைவாசல் விஜய், வேல ராமமூர்த்தி மற்றும் பலர் நடித்திருக்கின்றனர்.

இந்த படத்தை அமோகம் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது. ஹாரர் சம்பந்தமான கதைக்களத்தில் உருவாகும் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் தற்போது வெளியாகி ரசிகர்களின் கவனம் பெற்று இணையத்தில் வைரலாகி வருகிறது. அதுமட்டுமில்லாமல் இந்த போஸ்டரில் படம் விரைவில் திரைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த போஸ்டரை பார்க்கும்போதே இந்த படமும் ஒரு நொடி படத்தை போல் மிகப்பெரிய வெற்றி படமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# "படையாண்ட மாவீரா" படத்தின் முதல் பாடல் வெளியீடு

கடந்த 1998ம் ஆண்டு முரளி நடிப்பில் வெளியான 'கனவே கலையாதே' படத்தின் மூலம் தமிழ்த்திரையுலகில் இயக்குநராக அறிமுகமானவர் வ.கவுதமன். இரண்டாவது படமாக 2010ம் ஆண்டு வெளியான 'மகிழ்ச்சி' படத்தை இயக்கினார். இந்நிலையில், தற்போது வி.கே. புரடக்ஷன்ஸ் தயாரிக்கும் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக கொண்ட படம் ஒன்றை இயக்கி படத்தின் நாயகனாகவும் நடிக்கிறார்.

இப்படத்தில் சமுத்திரக்கனி, ராதாரவி, மன்சூர் அலிகான், பாகுபலி பிரபாகர், கிங்ஸ்லீ, ஆடுகளம் நரேன், இளவரசு, தீனா, மொட்டை ராஜேந்திரன், சரண்யா பொன்வண்ணன் ஆகியோர் நடிக்க, கதாநாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகம் ஆகிறார். ஜி.வி பிரகாஷ் இசையமைக்க, வைரமுத்து பாடல்கள் எழுதுகிறார்.

விருத்தாச்சலம், நெய்வேலி மற்றும் பண்ருட்டி பகுதிகளில் முதல்கட்ட படபிடிப்பு நடத்திய நிலையில், 'மாவீரா' என தலைப்பிடப்பட்டிருந்த இப்படத்தின் பெயர் 'மாவீரா படையாண்டவன்' என மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படம் மண்ணையும் மானத்தையும் காக்க வீரம் ஈரம் அறத்துடன் போராடி வாழ்ந்த ஒரு மாவீரனைப் பற்றிய உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படம் வரும் 23ம் தேதி வெளியாக உள்ளது.

இந்நிலையில் இயக்குநர் கவுதமனின் "படையாண்ட மாவீரா" படத்தின் முதல் பாடல் வெளியாகியுள்ளது. 'புலிக்கொடி' எனத்தொடங்கும் பாடல் வைரலாகி வருகிறது.

# ஐ.பி.எல்.: எஞ்சிய போட்டிகளை அங்கே நடத்துங்கள் இங்கிலாந்து முன்னாள் வீரர் யோசனை





10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வந்தது. கடந்த மார்ச் 22ம் தேதி தொடங்கிய இந்த தொடரில் இதுவரை 58 லீக் ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இன்னும் 12 லீக் ஆட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

இதனிடையே தற்போது இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது. இதன் காரணமாக ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகள் ஒரு வார காலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஐ.பி.எல். நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும் ஒரு வாரம் கழித்து நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் எஞ்சிய போட்டிகளை நடத்துவதற்கான முடிவை எடுப்போம் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள ஐ.பி.எல். தொடரை இங்கிலாந்தில் நடத்துங்கள் என்று அந்நாட்டின் முன்னாள் வீரர் மைக்கேல் வாகன் ஆலோசனை கூறியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "இங்கிலாந்தில் ஐ.பி.எல். தொடரை முடிப்பது சாத்தியமா? என்று கேட்டால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எங்களிடம் எல்லா மைதானங்களும் உள்ளன. பின்னர் இந்திய வீரர்கள் அடுத்ததாக நடைபெறும் டெஸ்ட் தொடருக்காக அங்கேயே இருக்கலாம். இது ஒரு யோசனை?" என்று பதிவிட்டுள்ளார்.

# இந்திய ராணுவ வீரர்களுக்கு கே.எல். ராகுல் நன்றி



இந்தியா மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகின்றன. பாகிஸ்தான் ராணுவம் மற்றும் பயங்கரவாத குழுக்கள் இந்திய எல்லைப் பகுதியில் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன.இந்திய ராணுவம் மிகச்சிறப்பாக இந்தத் தாக்குதல்களை தடுத்து நிறுத்தி இருக்கிறது.

இந்நிலையில், இந்திய ராணுவ வீரர்களுக்கு கிரிக்கெட் வீரர் கே.எல். ராகுல் நன்றி தெரிவித்துள்ளார் . இது தொடர்பாக கே.எல். ராகுல் கூறியதாவது,

எங்கள் மதிப்பிற்குரிய ராணுவ வீரர்களுக்கு , அவர்களுக்குப் பின்னால் நிற்கும் குடும்பங்களுக்கும் உங்கள் துணிச்சல், தியாகம் மற்றும் வலிமைக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். ஒரு தேசமாக, நாங்கள் உங்கள் பின்னால் உறுதியாக நிற்கிறோம், எங்களைப் பாதுகாத்ததற்கு நன்றி. ஜெய் ஹிந்த் என தெரிவித்துள்ளார் .

# மகளிர் முத்தரப்பு ஒருநாள் தொடர்: இலங்கையை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா ஆறுதல் வெற்றி




இந்தியா,தென்ஆப்பிரிக்காமற்றும்இலங்கைமகளிர்கிரிக்கெட்அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடர் கொழும்புவில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதும். இதன் முடிவில் புள்ளி பட்டியலில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதும். இதில் 4 போட்டிகளில் 3 வெற்றி பெற்ற இந்தியா முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தியது. அடுத்து இலங்கை 2 வெற்றிகளுடன் 2வது அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. தனது முதல் 3 போட்டிகளில் தோல்வியடைந்த தென் ஆப்பிரிக்க அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. இந்நிலையில் இந்த தொடரின் கடைசி லீக் ஆட்டம் இன்று நடைபெற்றது. இதில் இலங்கை தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற இலங்கை பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்க அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 315 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக அன்னெரி டெர்க்சன் 104 ரன்கள் விளாசினார். இலங்கை தரப்பில் மனுடி நாணயக்காரா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 316 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி 42.5 ஓவர்களில் 239 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனால் தென் ஆப்பிரிக்க அணி 76 ரன்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. இலங்கைதரப்பில் சமாரி அத்தபத்து 52 ரன்கள் அடித்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் கிளோ ட்ரையன் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து வரும் 11ம் தேதி நடைபெற உள்ள இறுதிப்போட்டியில் இந்தியா இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.